<u>**Sub Court, Eraniel**</u>

O.S. No. 46/2023
Date:08.06.2026.
DW1 - திரு. ஜோதி என் துரைராஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

உயிலில் 2 வது தரப்பினர் என்னுடைய அப்பா என்றால், ஆமாம். அதில் 3 வது தரப்பினர் என்னுடைய பெரியப்பா தங்கராஜ் மகன் ஜெயக்குமார் என்றால், ஆமாம். உயில் படி A பட்டிகை 3 வது Item சொத்து பால்ராஜ் என்பவருக்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். பால்ராஜ் சொத்திற்கு எல்கையாக கிழக்கில் தேவராஜ் சொத்தும், தெற்கில் சிங்கராயன் சொத்தும் வடக்கில் எங்களில் 2 வது தரப்பினர் துரைராஜ் சொத்தும், மேற்கு 6 அடியான இடைவெளி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். அந்த சொத்திற்கு பழைய எண்.5693 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், உயிலில் அவ்வாறு தான் இருக்கிறது. ஆனால் அந்த எண் தவறானது. எங்களுடைய சொத்திற்கான எண்.418/27. உயில் சொத்திற்கான பரப்பளவு 4.556 சென்ட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், உயிலில் அவ்வாறு தான் இருக்கிறது. ஆனால் 418/22 வேறு 418/27 வேறு. B பட்டிகை சொத்து என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், உயிலில் அப்படி தான் உள்ளது. 418/22 ல் என் அப்பாவிற்கு 4.556 சென்ட் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். பழைய சர்வே எண்.5693 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், உயிலில் அப்படி தான் உள்ளது. நான் முழுவதுமாக படிக்கவில்லை. உயில் இருப்பதாக எங்களுக்கு வழக்கிற்கு பிறகு தான் தெரிய வந்தது. அதற்கு வடக்கு பக்கம் ஜோசப் என்பவர் சொத்தும், கிழக்கு பக்கம் தேவராஜ் என்பவர் சொத்தும், தெற்கு பக்கம் 1ம் கட்சி பால்ராஜ் என்பவர் சொத்தும், மேற்கு பக்கம் 6 அடியான இடைவெளி என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால், நான் உயிலில் உள்ளதை முறையாக படிக்கவில்லை. தற்பொழுது தான் என்னிடம் உயில் கொடுக்கப்பட்டதால், என்னால், உடனடியாக படித்து முடிக்க இயலவில்லை. உயில் வழக்கு தாக்கல் செய்யும் பொழுதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், அப்போத உயில் நகல் எனக்கு கொடுக்கப்பட்டது என்றாலும், ஆமாம், ஆனால் உயில் தமிழில் இருப்பதால் வேறு நபர் மூலமாக தான் படிக்க முடியும். உயில் படி B பட்டிகை சொத்தை தவிர வேறு சொத்து என்

அப்பாவிற்கு கிடைக்கவில்லை என்றால், உயில் சொத்து பற்றி வழக்கிற்கு பிறகு தான் எனக்கு தெரியும். என் அப்பாவிற்கு செல்லம் நாடார் எழுதி கொடுத்த ஆவணம் எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார் என்றால், விலைக்கு வாங்கிய ஆவணம் 2000 ஆண்டில் எழுதிக் கொடுத்தார். அது வா.சா.ஆ.2 க்கு பிறகு எழுதப்பட்டது என்றால், ஆமாம். அந்த ஆவணத்தில் ஆவண எண்.364/1962 ன் படி செல்லம் நாடார் மனைவிக்கு கிடைத்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால், எனக்கு தெரியாது. விலைக்கு வாங்கிய விபரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ல் எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்து வந்தது என்றும், அது எங்களுக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை சொல்ல முடியாது என்றாலும், தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் 364/62 என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 என் பாட்டி ரஞ்சிதம் பெயரில் உள்ளது என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 ன் படி என் பாட்டிக்கு பழைய சர்வே எண். 5693 ல் 9.111 சென்ட் பரப்பளவு கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அந்த ஆவணத்தை உடனடியாக என்னால் படித்து கூற இயலவில்லை. ஆனால் எங்களுக்கு கொடுத்தது 7 1/2 சென்ட் தான். ரஞ்சிதம் எங்களுக்கு நேரடியாக 7 1/2 சென்ட் எழுதிக் கொடுக்கவில்லை என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.2 ன் படி செல்லம் நாடார் என் அப்பாவிற்கு 7 1/2 சென்ட் எழுதிக் கொடுக்கவில்லை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ. 2 ன் படி என் அப்பாவிற்கு செல்லம் நாடார் 9.111 சென்டில் வடக்கில் 4 1/2 சென்ட் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால், ஆமாம். அது விலைக் கிரயம் பத்திரம் மூலமாக வாங்கியது. அந்த சொத்தின் பழைய சர்வே எண்.5693 என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், தெரியவில்லை. பி.வா.சா.ஆ.2.ல் பரப்பளவு 1 ஏர் 80 சதுர மீட்டர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். அந்த ஆவணத்தில் கட்டடிடமும், மரமும் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால், விலைக்கு வாங்கும் போது காலி மனையாக தான் இருந்தது. எல்கை வடக்கு ஜோசப் சொத்தும், கிழக்கில் தேவராஜ் சொத்தும், தெற்கில் செல்லம் நாடார் சொத்தும், மேற்கு சரணம் காடு செல்லும் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம் அது விலைக்கு வாங்கிய சொத்து. உயில் ஆவணத்தில் என் அப்பாவிற்கு B பட்டிகை கொடுக்கப்பட்ட சொத்தின் எல்கையும். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் அப்பா விலைக்கு வாங்கிய சொத்தின் எல்கையும் ஒரே எல்கையாக தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், அவ்வாறு தான் உள்ளது. ஆனால் 2 சொத்தும் வெவ்வேறு. மேற்படி சொத்துக்களுக்கு ஒரே சர்வே எண்

என்றால், பழைய சர்வே எண் ஒன்றுதான். ஆனால், என் அப்பா கிரயம் வாங்கிய சொத்திற்கான சர்வே எண்.418/27. உயில் B பட்டிகை சர்வே எண்.418/22. ரஞ்சிதம் நாடாச்சி மற்றும் செல்லம் நாடாருக்கோ பழைய சர்வே எண்.5693 ல் 9.111 சென்ட் இடத்தை தவிர அதே சர்வே எண்ணில் வேறு சொத்துக்கள் கிடையாது என்றால், வேறு இடம் இருக்கிறாதா என்று தெரியாது. உயிலில் என் அப்பா பெயரில் உள்ள இடத்திற்கும், என் அப்பா கிரயம் பெற்ற சொத்திற்கும் இடையே 500 மீட்டம் இடைவெளி உள்ளது. உயிலில் என் அப்பா பெயரில் உள்ளது வாதியிடம் தான் சுவாதினம் இருக்கிறது. பி.வா.சா.ஆ.2 ல் 9.111 சென்டில் மீதம் உள்ள 4.55 சென்ட் இடம் செல்லம் நாடார் பெயரில் இருப்பதால், மூல ஆவணம் என் அப்பாவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். தெற்கு பக்கம் உள்ள 4.55 சென்டை செல்லம் நாடார் அவர் கைவசம் வைத்திருந்தார் என்றாலும், எங்களுக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், எழுதிக் கொடுக்கவில்லை . ஆனால், அவர் பெயரில் உள்ள சொத்தை நாங்கள் தாம் பராமரித்து வருகிறோம். என் அப்பா 06.01.2011 ல் இறந்தார். என் அப்பா வீடு எப்பொழுது கட்டினார் என்றால் 1996 ம் வருடத்தில் ஆரம்பித்தார். தாத்தா சொத்தை விலைக்கு எழுதிக் கொடுக்கும் போது தான் வீடு கட்டி முடிக்கப்பட்டது. என் அப்பா தாத்தா எழுதிக் கொடுத்த இடத்தில் தான் வீடு கட்டினார் என்றால், ஆமாம். என் அப்பா 1996 ம் வருடத்தில் வீடு கட்ட ஆரம்பித்தார் என்பதை காண்பிக்க கட்டிட அனுமதி வரைபடம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், இல்லை. என் அப்பா பெயரில் சொத்து இல்லாத நேரத்தில் என் அப்பா பெயரில் கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி பெற முடியாது என்றால், என் அப்பாவிற்கும், தாத்தாவுக்கும் உள்ள புரிந்துணர்வு படி எப்படி என்று எனக்கு தெரியாது. என் அப்பா பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது நான் தாக்கல் செய்யவில்லை என்றால், இல்லை. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அவர் பெயரில் தனிப்பட்டா இருந்ததாக ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். அம்மா பெயரில் தான் இருந்தது. என் அப்பா உயிருடம் இருக்கும் வரை அவர் பெயருக்கு நில வரியோ, வீட்டு வரியோ, பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால், அவர் பெயரில் தான் அவர் இறக்கும் வரை இருந்தது. என் அப்பா பெயரில் இருந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால், என் அப்பா பெயரில் பட்டாவோ, நில வரி ரசீதோ இல்லை என்றால், சரியல்ல. அப்பா இருக்கும் வரை அவர் பெயரில் தான் இருந்தது. என் அப்பா பெயரில் இருந்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்ய முடியாது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும்

பி.வா.சா.ஆ.12 என் அப்பா காலத்திற்கு பிறகு நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால், ஆமாம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் இணைத்துள்ள ரசீது என் அம்மா பெயரில் தான் இருக்கிறது என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.12 ல் உள்ள ரசீதில் 0.03.0 வில் பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 0.03.0/ பகுதி என்று போடப்பட்டுள்ளது. பாகபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் தவிர என் அப்பா, அம்மாவிற்கோ வேறு சொத்துக்கள் கிடையாது என்றால், ஆமாம். என் அப்பா வாங்கிய சொத்தை எவ்வளவு காலமாக அனுபவித்து வருகிறோம் என்றால், என் அப்பா விலைக்கு வாங்கிய பிறகு அனுபவித்து வருகிறோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.12 ல் இணைக்கப்பட்டுள்ள சான்றின் அடிப்படையில் வழக்கு பட்டிகை சொத்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த சான்று 06.10.2022 ல் வாங்கியதாக உள்ளது என்றால், ஆமாம். 06.10.2022 ல் தான் நில வரி செலுத்திய தேதியும் உள்ளதால், கிராம நிர்வாக அலுவலரிடம் கள்ளத்தனமாக வாங்கியது என்றால், இல்லை. கைவசம் அனுபவம் குறித்து நீதிமன்றத்தை தவிர யாருக்கும் உரிமை இல்லை என்றால், தெரியாது. அந்த போலியான சான்றிதழ்களை அடிப்படை ஆவணங்களாக வைத்துதான் பாகப்பிரிவினை செய்து கொண்டிருக்கிறோம் என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.12 அப்பா இறந்த பிறகு என் அப்பா கிரயம் பெற்ற ஆவணத்திற்கு எதிராக எழுதப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.12 ன் படி வீடு எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.3 நான் என் அண்ணனுக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.12 ஏற்படுத்தப்பட்ட 5 மாதத்திற்குள் பி.வா.சா.ஆ.3 எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.3 ல் தெற்கு பக்கத்தில் முக்கால் சென்ட் எழுதிக் கொடுத்தேன் என்றால், முக்கால் சென்ட் என் அண்ணன் தான் எனக்கு எழுதி தந்தார். பாகபத்திரத்தில் எனக்கு வீடு எழுதிக் கொடுத்ததால் மீண்டும் எனக்கு முக்கால் சென்ட் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், எனக்கு வீட்டுக் கடன் வாங்க வேண்டியது இருந்ததால், என் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்டது. வீட்டு கடன் 3 .750 மூன்று முக்கால் சென்ட்க்கு வாங்கலாம் என்றால், முடியாது. வாதி கோரியுள்ள பரிகாரத்தில் இருந்து தப்பிப்பதற்காக முறையற்ற வகையில் 4 1/2 சென்ட் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை வாதி அனுபவித்து வருகிறார் என்றாலும், எங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும், சரியல்ல. தாத்தா

கொடுத்ததில் இருந்து எங்கள் அனுபவத்தில் தான் இருக்கிறது. உயில் ஆவணத்தில் காணப்பட்ட Sub Division பிழையை பயன்படுத்தி வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், எந்த முன் ஆவணமும் இல்லாமல், போலியக பி.வா.சா.ஆ.12 பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டதால், அது இரத்து செய்யப்பட வேண்டும் என்றால், இல்லை. 21.11.2022 என் மீது காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்தார் என்றால், ஆமாம். வாதியின் அண்ணன் காவல் நிலையத்தில் பணியாற்றுவதால் அதை பயன்படுத்தி புகார் கொடுத்தார். நான் வாதிக்கு உண்டான சொத்தில் அத்து மீறி நுழைந்து அங்கிருந்த விலை உயர்ந்த மரங்களை வெட்டி அழிவு செய்ததால், அதற்கான இழப்பீடு தொகையை கொடுக்க வேண்டும் என்றால் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால், சொத்து ஆவணங்களை காவல் நிலையத்தில் பார்த்து அது என்னுடைய சொத்து என்று கூறிவிட்டார்கள். புகார் கொடுத்த போது தான் பாகப்பிரிவினை பத்திரத்தை நாங்கள் காண்பித்தோம் என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.12 பாகப்பிரிவினை பத்திரத்தை காண்பித்து சொத்தில் உரிமம் கோரினோம் என்றால், ஆமாம். போலீஸ் விசாரணையில் சொத்து வாதியின் கைவசம் இருப்பதால், நான் மீண்டும் அத்து மீறி நுழைந்து அழிவு ஏற்படுத்த கூடாது என்று என்னிடம் எழுதி வாங்கினார்கள் என்றால், இல்லை. எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இருக்க கூடாது என்று கூறி அனுப்பி வைத்தார்கள். பாகப்பிரிவினை பத்திரத்தை நாங்கள் காவல் நிலையத்தில் காட்டிய பிறகு தான் பி.வா.சா.ஆ.12 பற்றி வாதிக்கு தெரிய வந்தது என்றால், அவருக்கு நாங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தவறுகள் தொடர்பாக மாவட்ட பதிவாளரிடம் வாதி புகார் கொடுத்து நாங்கள் ஆஜரானோம் என்றால், இல்லை, அது போல் அறிவிப்பு எதுவும் வரவில்லை. 05.04.2023 அன்று மீண்டும் வழக்கு சொத்தில் நாங்கள் அத்து மீறி நுழைந்து அழிவு ஏற்படுத்தியதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால், வாதியின் அண்ணன் காவல் நிலையத்தில் பணியாற்றுவதால், அதை பயன்படுத்தி என் மீது புகார் கொடுத்தார். வாதியின் அண்ணனுக்கும் எனக்கும் நல்ல பழக்கம் உண்டு என்றால், கண்டால் பேசிக்கொள்வோம். வாதியும், அவர் அண்ணனும் நன்றாக பேசிக்கொள்ள மாட்டார்கள் என்றால், சரியல்ல. என் அப்பா கேரளாவில் ஒப்பந்த வேலை பார்த்து வந்தார். எந்த வருடம் தொடங்கினார் என்று எனக்கு தெரியாது. ஆனால் வாதியின் அப்பா இறந்த பிறகு இங்கு வந்து விட்டார். வாதியின் அப்பா எந்த வருடம் இறந்தார் என்றால், சரியாக தெரியவில்லை. 1993 அல்லது 1994 என்று நினைக்கிறேன். ரஞ்சிதம் இறந்ததற்கு பிறகு வாதியின் அப்பா, செல்லம் நாடாரை பராமரித்து வந்தார்

என்றால், சரியல்ல. நாங்களும் சேர்ந்து தான் பராமரித்தோம். செல்லம் நாடார், ரஞ்சிதம், துரைராஜ், பால்ராஜ், பொன்னம்பெருமாள் மற்றும் வாதியின் தம்பி என்னுடைய பிள்ளை ஒன்று செல்லம் நடாருக்கு உரிமைப்பட்ட ரீசர்வே எண்.418/4ல் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்றால், சர்வே எண் தெரியாது ஆனால், அடக்கம் செய்யப்பட்டது சரிதான். அந்த இடத்தின் விஸ்தீரணம் 4 சென்ட் என்றால், தெரியாது. அந்த இடம் செல்லம் நாடாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால், ஆமாம். அந்த கல்லறை பொதுவாக பயன்பாட்டிற்காக உள்ளது என்று வா.சா.ஆ.2 உயிலில் எழுதப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.6 பட்டா வழக்கு தாக்கல் செய்த பிறகு எங்களுக்கு கிடைத்தது என்றால், ஆமாம். வழக்கிற்கு முன்பே எங்கள் பெயரில் பட்டா இருந்தது. வீட்டு வரி தற்போதும் அப்பா பெயரில் தான் இருக்கிறது என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.5 முதல் 9 வரை உள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பிறகு அதிகாரிகளை சுவாதீனப்படுத்தி எங்களுடைய அசல் ஆவணங்களுக்கு புறம்பாகவும், உண்மைக்கு புறம்பாகவும், மோசடியாக பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால், அது நிலைக்காது என்றால், சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்ககூடியது என்றால், இல்லை.

(மறு விசாரணை இல்லை.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.